## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 64/2021

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 02 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 02.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுந்தரமூர்த்தி (PW-2) | வயது | : | 68/2025 |
| க/த பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | திருக்கலார் | வட்டம் | : | |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணைகள் வரவில்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் பெயர் என்னவென்றால் பாலசுப்ரமணியம். வாதிக்கு எத்தனை பசங்கள் என்றால் 2 மகன்கள். தற்பொழுது அவர்கள் எங்கு உள்ளார்கள் என்றால் சென்னையில் உள்ளார்கள். வாதியானவர் எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெளிவாக தெரியவில்லை.

தாவா சொத்தினை பிரதிவாதி கண்ணன் அவரது மகன்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் இரண்டு மகன்களும் தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஏற்கனவே ஓட்டு வீடு இருந்ததை தற்பொழுது மாடி வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியை வாதியின் மகன்கள் தாக்கியதில் கண் அடிப்பட்டது சம்மந்தமாக குற்ற வழக்கு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். அதிலிருந்து பிரதிவாதியானவர் கண் தெரியாமல்தான் தற்பொழுது உள்ளார் என்றால் சரிதான்.

வாதி சித்ராவின் கணவர் வெளிநாடு செல்வதற்கு முன்பு மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருச்சி ஆகிய இடங்களில் வாதி அவருடைய கணவருடன் சேர்ந்து வசித்து வந்துள்ளார் என்றால் இல்லை, வாதியின் கணவர் இறந்த பின்புதான் அவரது மகன்களின் படிப்பிற்காக மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருச்சி ஆகிய இடங்களில்

தங்கியுள்ளார். வாதியின் மகன்கள் படிப்பை முடித்து சென்னையில் வேலை பார்ப்பதால் அவருக்கு உதவியாக வாதியும் உள்ளார் என்றால் சரியல்ல, வாதி ஊரில்தான் உள்ளார். வாதியானவர் அவருடைய மகன்களுடன் சென்னையில் உள்ளார், தற்பொழுது வாதி கேட்டுக்கொண்தன்பேரில் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்குண்டான பட்டா பிரதிவாதி பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதியின் அப்பா பெயரில் உள்ளது. தாவா சொத்தானது பிரதிவாதி அப்பா பெயரில் இருப்பதற்கான எந்தவிதமான ஆவணங்களும் வாதியே தாக்கல் செய்யாததால் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை தாக்கல் செய்த பின்னர் வாதி சித்ரா தாவா சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை வேண்டி மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசியதற்கான எந்தவிதமான ஆவணத்தையும் வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக எந்தவித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் முழு விஸ்தீரணமும் பிரதிவாதி கண்ணனின் அனுபோகத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதி கண்ணன் குடும்பத்திற்கும் முன் விரோதம் இருப்பதால் பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.14 16:33:47 +0530

District Munsif
Mannargudi.